| Code No. | L – 4020 |
|---|---|

**Entrance Examination for Admission to the P.G. Courses**
**in the Teaching Departments, 2021**

**CSS**

**TAMIL**

**General Instructions**

1. The Question Paper is having two Parts — Part 'A' Objective type (60%) & Part 'B' Descriptive type (40%).
2. Objective type questions which carry 1 mark each are to be (✓) 'tick marked' in the response sheets against the appropriate answers provided.
3. 8 questions are to be answered out of 12 questions carrying 5 marks each in Part 'B'.
4. **Negative marking** : 0.25 marks will be deducted for each wrong answer in Part 'A'.

**Time : 2 Hours** **Max. Marks : 100**

| To be filled in by the Candidate | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Register Number | in Figures | | | | | | | | |
| | in words | | | | | | | | |

PART – A

(Objective Type)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(60 × 1 = 60 மதிப்பெண்கள்)**

1. நவிர மலைக்கு உரிய சிற்றரசன்

   a) ஓரி b) ஆய் c) பேகன் d) நன்னன்

DO NOT WRITE HERE

---

2. பின்வருவனவற்றுள் பாண்டியர்களை பற்றி மட்டும் கூறும் தொகை நூல் எது ?

   a) அகநானூறு  b) பதிற்றுப்பத்து  c) பரிபாடல்  d) நற்றிணை

3. தமிழ்மொழி எவ்வகை மொழியமைப்பைச் சார்ந்தது ?

   a) ஒட்டுநிலை மொழி  b) தனிநிலை மொழி

   c) உட்பிணைப்பு நிலை மொழி  d) பிணைப்புநிலை மொழி

4. பறவையின் இளமைப் பெயர்

a) குருளை b) பிள்ளை c) பறழ் d) மறி

5. கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்திற்கு வைத்த பெயர் என்ன?

a) கம்பராமாயணம் b) இராம காவியம் c) இராமாவதாரம் d) இராம காதை

6. ‘கொல்’ என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்

a) ஐயம் b) எளிது c) தெளிவு d) விருப்பம்

7. கு.ப.ரா.வின் முதல் சிறுகதை எது?

a) விடியுமா b) சிறிது வெளிச்சம்

c) நூருன்னிஸா d) திரை

8. ‘வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்தவர்’ என சிவஞான முனிவரால் புகழப்பட்ட உரையாசிரியர் யார்?

a) இளம்பூரணர் b) சேனாவரையர்

c) நச்சினார்க்கினியர் d) பேராசிரியர்

9. இவற்றில் பௌத்த நூல் எது?

a) பெருங்கதை b) நரிவிருத்தம்

c) ஆசியஜோதி d) அருங்கலச் செப்பு

10. பெருஞ்சித்திரனார் யாரால் ஆதரிக்கப்பட்டார்?

a) குமணன் b) அதியமான்

c) வரபதி ஆட்கொண்டான் d) சீதக்காதி

11. நிகண்டு என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்திய நிகண்டு ஆசிரியர் யார்?

a) காங்கேயர் b) மண்டலபுருடர்

c) ரேவணசித்தர் d) திவாகரர்

12. மனத்தில் கோயில் கட்டிய நாயனார்

a) இளையன்குடி நாயனார்
b) ஏனாதி நாயனார்
c) எறிபத்த நாயனார்
d) பூசலார் நாயனார்

13. உழத்திப்பாட்டு எனப்படுவது

a) பள்ளு
b) குறவஞ்சி
c) தூது
d) கலம்பகம்

14. பகாப்பதத்திற்குச் சான்று கண்டறிக

a) நல்லோர்
b) கவிஞன்
c) வாழ்க
d) பப்படம்

15. நன்னூல் குறிப்பிடும் சூத்திரவகை எத்தனை?

a) 4　b) 6　c) 5　d) 8

16. தன்னையே யசோதையாகப் பவித்து கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடியவர் யார்?

a) குலசேகராழ்வார்
b) திருமங்கையாழ்வார்
c) பெரியாழ்வார்
d) நம்மாழ்வார்

17. யானையின் பெண் இனப்பெயர் என்ன?

a) நாகு
b) பிடி
c) கடமை
d) மூடு

18. காட்டில் கணவனை இழந்த பெண்ணின் நிலையைக் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை துறை எது?

a) சுரநடை
b) தபுதார நிலை
c) முதுபாலை
d) தாபத நிலை

19. செய்யுள் மொழியால் சீர் புனைந்து தொடுப்பது

a) தொன்மை  b) விருந்து

c) தோல்  d) அழகு

20. பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| A. | ஜெயகாந்தன் | – | 1. | வேட்டி |
| B. | க. வேணுகோபால் | – | 2. | குறத்தி முடுக்கு |
| C. | ஜி. நாகராஜன் | – | 3. | வெண்ணிலை |
| D. | ராஜநாராயணன் | – | 4. | தேவன் வருவாரா |

a) 3 - 4 - 1 - 2  b) 4 - 3 - 2 - 1

c) 2 - 1 - 3 - 4  d) 1 - 2 - 3 - 4

21. இதழ் ஒட்டாமல் பாடுவது

a) சுழிகுளம்  b) முரசபந்தம்

c) நிரோட்டகம்  d) திரிபங்கி

22. களவு காலத்தில் கூற்றுக்குரியவர்களின் எண்ணிக்கை என்ன?

a) 6  b) 13  c) 8  d) 12

23. முதல் பெண் இதழாசிரியர்

a) இராஜம் கிருஷ்ணன்  b) பண்டித விசாலாட்சி அம்மாள்

c) வை.மு. கோதை நாயகி  d) அனுத்தமா

24. முதல் உலகத்தமிழ் மாநாடு நடைப்பெற்ற இடம்

a) தமிழ்நாடு  b) இலங்கை

c) மலேசியா  d) மொரீசியஸ்

25. ‘நீராடும் கடலுடுத்த’ எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தின் பா வகை யாது?

a) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
b) இன்னிசை வெண்பா
c) சிந்தியல் வெண்பா
d) நிலைமண்டில ஆசிரியப்பா

26. இஸ்லாமியத் தாயுமானவர் என்று அழைக்கப்படுபவர் யார்?

a) வண்ணக் களஞ்சியப் புலவர்
b) குணங்குடி மஸ்தான்
c) செய்குத்தம்பி பாவலர்
d) உமறுப்புலவர்

27. தொல்காப்பியர் நடுகல் குறித்து எந்த திணையில் குறிப்பிடுகின்றார்?

a) வாகைத்திணை
b) வெட்சித்திணை
c) பாடாண் திணை
d) காஞ்சித்திணை

28. தங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடத்தை நிறுவியவர் யார்?

a) எல்லீஸ்
b) கால்டுவெல்
c) பர்சிவல் பாதிரியார்
d) சீகன்பால்கு

29. பைபிள் மொழிப்பெயர்க்கப்பட்ட முதல் இந்திய மொழி எது?

a) இந்தி
b) வங்காளம்
c) தமிழ்
d) மலையாளம்

30. இவற்றில் சொல்லணி வகை சார்ந்தது எது?

a) திரிபு அணி
b) ஏது அணி
c) நுட்ப அணி
d) இலேச அணி

31. ‘கோவேறு கழுதைகள்’ என்ற நாவலின் ஆசிரியர் யார்?

a) சுந்தர ராமசாமி
b) இமையம்
c) மௌனி
d) வாஸந்தி

32. வில்லிபாரதத்திற்கு பாயிரம் இயற்றியவர்

a) வரந்தருவார்
b) அருணகிரியார்
c) வில்லிபுத்தூரார்
d) பெருந்தேவனார்

33. சேர நாட்டு துறைமுக நகரம் எது ?

a) காவிரிப்பூம்பட்டினம் b) முசிறி

c) மருகூர்ப்பட்டினம் d) கொற்கை

34. மூலத்திராவிட மொழியிலிருந்து இறுதியாக பிரிந்த மொழி எது ?

a) தெலுங்கு b) துளு

c) தமிழ் d) மலையாளம்

35. தொல்காப்பியர் பெயர் சுட்டிக்கூறா தளை யாது ?

a) ஆசிரியத்தளை b) வஞ்சித்தளை

c) வெண்டளை d) கலித்தளை

36. திராவிட சிசு என்று அழைக்கப்படுபவர்

a) ஆதிசங்கரர் b) திருஞானசம்பந்தர்

c) நாவுக்கரசர் d) சேக்கிழார்

37. ஆணும், பெண்ணும் சம உரிமை பெற்றிருந்த ஒழுக்கநிலையைக் கூறுவது

a) குறிஞ்சி ஒழுக்கம் b) பாலை ஒழுக்கம்

c) முல்லை ஒழுக்கம் d) மருத ஒழுக்கம்

38. பன்னிரு திருமுறைகளைப் பாடியவர்களின் எண்ணிக்கை

a) 27 b) 30 c) 25 d) 28

39. தவறான இணையை கண்டறிக

a) கலிப்பா – காய்முன் நிரை b) வெண்பா – கனிமுன் நேர்

c) ஆசிரியப்பா – மாமுன் நேர் d) வஞ்சிப்பா – கனிமுன் நிரை

40. பெண் மடல் ஏறுவதாக அமைத்து மடல் இலக்கியம் பாடியவர்

a) ஆண்டாள்
b) பெரியாழ்வார்
c) நம்மாழ்வார்
d) திருமங்கையாழ்வார்

41. எழுத்து இதழின் ஆசிரியர் பெயர் என்ன?

a) சுரதா
b) சி.சு. செல்லப்பா
c) முருகு சுப்பிரமணியம்
d) கண்ணதாசன்

42. பதினெண் மேற்கணக்கு நூல்களுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல் எது?

a) வெண்பாப் பாட்டியல்
b) வரையறுத்த பாட்டியல்
c) பன்னிரு பாட்டியல்
d) சிதம்பர பாட்டியல்

43. காரைக்கால் அம்மையார் பாடிய அந்தாதி நூல் எது?

a) திருவந்தாதி
b) பொன்வண்ணத்தந்தாதி
c) அற்புதத் திருவந்தாதி
d) அபிராமி அந்தாதி

44. காந்தியக் கவிஞர் என்ற அடைமொழி உடையவர்

a) நாமக்கல் கவிஞர்
b) அப்துல் ரகுமான்
c) முடியரசன்
d) புலமைப்பித்தன்

45. "*ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப*" என்ற நூற்பா அடிப்படையில் தோன்றிய இலக்கியம் எது?

a) பிள்ளைத்தமிழ்
b) பரணி
c) கலம்பகம்
d) உலா

46. திருக்குறளுக்கு ஆராய்ச்சிப் பதிப்பினை வெளியிட்டவர்

a) வ.செ. குழந்தைசாமி
b) கி.வா. ஜகந்நாதன்
c) தெ.பொ.மீ.
d) க. அப்பாதுரை

47. தலைவி யாரிடம் அறத்தொடு நிற்பாள்

a) தோழி
b) செவிலி
c) நற்றாய்
d) தலைவன்

48. அறுவகை இலக்கணத்தின் ஆசிரியர் யார்?

a) சிவஞான முனிவர்
b) வீரமாமுனிவர்
c) சுவாமிநாத தேசிகர்
d) வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார்

49. தமிழில் ஞானபீடம் விருது பெற்ற முதல் நூல் எது?

a) சில நேரங்களில் சில மனிதர்கள்
b) பல்லவதிலகம்
c) சித்திரப்பாவை
d) சஞ்சாரம்

50. இறையனார் களவியலுக்கு சான்று பாடல்களாக எழுதப்பட்ட இலக்கியம்

a) பாண்டிக்கோவை
b) தஞ்சைவாணன் கோவை
c) சிதம்பர செய்யுட் கோவை
d) திருக்கோவை

51. நன்னூல் கூறும் பொருள்கோள் எண்ணிக்கை எத்தனை?

a) 4
b) 6
c) 10
d) 8

52. கண்ணகிக்குக் கோயில் அமைந்துள்ள ஊர் எது?

a) திருவாஞ்சிக்களம்
b) குயிலாலுவம்
c) குணவாயிற்கோட்டம்
d) கலிங்கபுரம்

53. தண்ணுமை என்பது

a) துளைக்கருவி
b) தோற்கருவி
c) ஊதுகருவி
d) மீட்டுக்கருவி

54. மணிமேகலைக்கு அமுதசுரபியில் முதலில் பிச்சையிட்டவர் யார்?

a) காயசண்டிகை
b) ஆதிரை
c) சிந்தாதேவி
d) தீவதிலகை

55. இவற்றில் எவை இளிவரல் மெய்ப்பாட்டின் உட்பிரிவு ஆகும்

a) வறுமை
b) தறுகண்
c) மென்மை
d) சிறுமை

56. இந்திரகாளியம் நுவலும் பொருள் யாது?

a) யாப்பு
b) அணி
c) பாட்டியல்
d) புற இலக்கணம்

57. திருக்குறளில் அறத்துப்பால் எத்தனை அதிகாரங்களை உடையது?

a) 70
b) 25
c) 38
d) 46

58. சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கும் அமையப் பாடப்படும் பிள்ளைத்தமிழ் பருவம் எது?

a) காப்பு
b) அம்புலி
c) சப்பாணி
d) வருகை

59. உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த முதல் நூல் எது?

a) சீவக சிந்தாமணி
b) பதிற்றுப்பத்து
c) பத்துப்பாட்டு
d) குறுந்தொகை

60. தமிழில் எழுதப்பட்ட முதல் ஐந்திலக்கண நூல்

a) அவிநயம்
b) தொன்னூல் விளக்கம்
c) வீரசோழியம்
d) நேமிநாதம்

ANSWER SHEET — PART – A

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | B | C | D | E | 21 | A | B | C | D | E | 41 | A | B | C | D | E |
| 2 | A | B | C | D | E | 22 | A | B | C | D | E | 42 | A | B | C | D | E |
| 3 | A | B | C | D | E | 23 | A | B | C | D | E | 43 | A | B | C | D | E |
| 4 | A | B | C | D | E | 24 | A | B | C | D | E | 44 | A | B | C | D | E |
| 5 | A | B | C | D | E | 25 | A | B | C | D | E | 45 | A | B | C | D | E |
| 6 | A | B | C | D | E | 26 | A | B | C | D | E | 46 | A | B | C | D | E |
| 7 | A | B | C | D | E | 27 | A | B | C | D | E | 47 | A | B | C | D | E |
| 8 | A | B | C | D | E | 28 | A | B | C | D | E | 48 | A | B | C | D | E |
| 9 | A | B | C | D | E | 29 | A | B | C | D | E | 49 | A | B | C | D | E |
| 10 | A | B | C | D | E | 30 | A | B | C | D | E | 50 | A | B | C | D | E |
| 11 | A | B | C | D | E | 31 | A | B | C | D | E | 51 | A | B | C | D | E |
| 12 | A | B | C | D | E | 32 | A | B | C | D | E | 52 | A | B | C | D | E |
| 13 | A | B | C | D | E | 33 | A | B | C | D | E | 53 | A | B | C | D | E |
| 14 | A | B | C | D | E | 34 | A | B | C | D | E | 54 | A | B | C | D | E |
| 15 | A | B | C | D | E | 35 | A | B | C | D | E | 55 | A | B | C | D | E |
| 16 | A | B | C | D | E | 36 | A | B | C | D | E | 56 | A | B | C | D | E |
| 17 | A | B | C | D | E | 37 | A | B | C | D | E | 57 | A | B | C | D | E |
| 18 | A | B | C | D | E | 38 | A | B | C | D | E | 58 | A | B | C | D | E |
| 19 | A | B | C | D | E | 39 | A | B | C | D | E | 59 | A | B | C | D | E |
| 20 | A | B | C | D | E | 40 | A | B | C | D | E | 60 | A | B | C | D | E |

# TAMIL

## PART – B

(Descriptive Type)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் **எட்டனுக்கு** விடை தருக.

**($8 \times 5 = 40$ மதிப்பெண்கள்)**

1. புதுக்கவிதைகளின் சமகாலப் போக்குகளை விவரி.

2. நன்னூலில் இடம்பெற்றுள்ள பதவியல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

3. பரணி இலக்கியத்தின் இலக்கணம் கூறி அதன் அமைப்பு முறையை விளக்குக.

4. ஆழ்வார்களின் தமிழ்ப்பணியை ஆராய்க.

5. தமிழில் அற நூல்கள் குறித்து எழுதுக.

6. முல்லைப் பாட்டின் இலக்கியத் தன்மைகளை விளக்குக.

7. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை விளக்குக.

8. காரைக்கால் அம்மையாரின் பக்தி நெறியினை பெரியபுராணத்தின் வழிநின்று விளக்குக.

9. கேரளத்து நாட்டார் நிகழ்த்துக் கலைமரபுகளை விளக்குக.

10. வெண்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளைக் கூறுக.

11. பொருளிலக்கணத்தின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

12. தமிழ் மலையாள உறவு குறித்து எழுதுக.

---